**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்**

முன்னிலை : **திரு. ப. சரவணன், பி.எல்.,**

கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்

2022–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11–ஆம் நாள் செவ்வாய் கிழமை

**இ.ம எண்.2/2022**

**உள்**

**அசல் வழக்கு எண்.89/2021**

மீனா ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. லீலாவதி
2. மணிமேகலா
3. மணிமாலா ... 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்
4. சின்னமாயன்
5. சார்பதிவாளர் அவர்கள், நிலக்கோட்டை

... 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள்/

உத்தேச 4 மற்றும் 5 பிரதிவாதிகள்

இம்மனு 23.09.2022–ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.P.V.குருதேவராஜ் அவர்களும், 1–ம் எதிர்மனுதாரர்/1–ஆம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.S.வடிவேல் அவர்களும், 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள்/2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. V. பார்த்திபன் அவர்களும் ஆஜராகியும், 4 வது எதிர்மனுதாரர் தோன்றாத்தரப்பினராகியும், 5 வது எதிர்மனுதாரர் தரப்பில் கூடுதல் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியபோதும், இந்த மனுவில் ஆட்சேபனை செய்யாத நிலையில், இரு தரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

4 மற்றும் 5 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 4 மற்றும் 5 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டி கட்டளை 1, விதி 10 (2) சி.பி.சி.–யின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு.

**2. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சாராம்சம் :**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. மனுதாரர் தாவா சொத்தில் பாகப் பிரிவினை வேண்டியும், சுவாதீனம் வேண்டியும் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள்/2 மற்றும் 3 பிரதிவாதிகள் 4–ஆம் எதிர்மனுதாரரிடம், தாவா 1வது லக்க சொத்தை பொறுத்து, 21.04.2021–ல் ஒரு கிரைய ஒப்பந்தம் செய்துள்ளார்கள். வாதியின் உரிமையை மறுக்கும் வண்ணம் பிரதிவாதிகள் செயல்பட்டு வருகிறார்கள். மேற்படி கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட விபரம் தெரிய வந்த பிறகு வாதியின் தரப்பில் 5–ஆம் எதிர்மனுதாரருக்கு நோட்டீஸ் அனுப்பட்டது. 4 மற்றும் 5வது எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 4 மற்றும் 5 பிரதிவாதிகளாக சேர்க்காவிட்டால், தாவா சொத்தை பொறுத்து பல்வேறு ஆவணங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 4 மற்றும் 5வது பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டும். ஆகவே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 1–ஆம் எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்டு, 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆட்சேபணையின் சுருக்கம் :**

கடந்த 21.09.2004 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் 31.05.2006 தேதியிட்ட பாகப் பத்திரம், 21.06.2011 தேதியிட்ட பாக விடுதலை பத்திரம், ஆகிய ஆவணங்கள் ஏற்பட்ட விபரங்கள் அனைத்தும் வாதிக்கு நன்றாக தெரியும். மேலும் மேற்படி ஆவணங்களில் வாதி ஒரு தரப்பினர். வாரிசுதாரர்கள் அடிப்படையிலும், ஆவணங்கள் அடிப்படையிலும், பிரதிவாதிகள் சொத்துக்களை அனுபவம் செய்து வந்து, 4–ஆம் எதிர்மனுதாரருடன் 21.04.2001–ல் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அதை ஆட்சேபணை செய்ய மனுதாரர்/வாதிக்கு உரிமையில்லை. ஆகவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. **பிரச்சனை –**

இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்த மனுவை அனுமதிக்க போதுமான காரணங்கள் உள்ளதா? என்பதேயாகும்.

5. இந்த மனுவில் மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6. **தீர்வு–**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கானது 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக 4–ல் 1 பங்கு பாகப் பிரிவினை வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, வாதி தரப்பு சாட்சியங்களின் விசாரணைக்காக அசல் வழக்கு நிலுவையில் உள்ளது.

7. மனுதாரர் தெரிவிப்பது யாதெனில், தாவா 1வது லக்க சொத்தைப் பொறுத்து 21.04.2001 தேதியன்று 2–ம் பிரதிவாதி, 4–ம் எதிர்மனுதாரருடன் ம.சா.ஆ.2–ன்படி கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டதாகவும், அசல் வழக்கு நிலுவையில் உள்ள விபரம், ம.சா.ஆ.1 மூலமாக 5–ம் எதிர்மனுதாரருக்கு தெரியப்படுத்தியும், 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள், மனுதாரரின் நலனுக்கு எதிராக செயல்பட்டு வருவதாகவும், ஆகவே 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 4 மற்றும் 5 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டுமென மனுதாரர் தெரிவித்துள்ளார். அசல் வழக்கானது 11.03.2001 தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு, 16.03.2001 தேதியன்று வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு, ம.சா.ஆ.2 ஆவணம் 21.04.2001 தேதியன்று ஏற்பட்டுள்ளது. ஆக வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு ஏற்படும் உரிமை மாற்றங்கள் அனைத்தும், இந்த வழக்கின் தீர்ப்புக்கு கட்டுப்பட்டது தான். ம.சா.ஆ.2–ன்படி ஏதேனும் கிரைய பத்திரங்கள் ஏற்பட்டால் அது வாதியின் உரிமையை எந்த விதத்திலும் பாதிக்காது. தாவா சொத்தில் வாதிக்கு 1/4 பாகம் கிடைக்கத்தக்கதா என்பதை ஆராய

வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஆனால் பிரதிவாதியின் வழக்கு யாதெனில் ஏற்கனவே பாகப் பிரிவினை நடைபெற்றுவிட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது. வாதியின் பாக உரிமையை நிர்ணயம் செய்ய 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கிற்கு அவசிய தரப்பினரோ, முக்கிய தரப்பினரோ இல்லை. ஆகவே மனுதாரர் கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என இப்பிரச்சினைக்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2022–ஆம் வருடம் அக்டோபர் மாதம் 11–ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P SARAVANAN Digitally signed by P SARAVANAN Date: 2022.10.12 13:49:39 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :</u>

ம.சா.ஆ.1 – 24.03.2021 – மனுதாரர், 5–ஆம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய அறிவிப்பு. அசல்.

ம.சா.ஆ.2 – 21.04.2021 – 3 வது எதிர்மனுதாரரும், 4 வது எதிர்மனுதாரரும் ஏற்படுத்திக் கொண்ட கிரைய ஒப்பந்தப் பத்திரம். நகல்.

P SARAVANAN Digitally signed by P SARAVANAN Date: 2022.10.12 13:49:46 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
திண்டுக்கல்.
இ.ம.எண்.2/2022
உள்
அசல் வழக்கு
எண்.89/2021
உத்தரவு – தெளிவு
நாள் – 11.10.2022

.